OS:685/2018

Date: 15.02.2024

பெயர் :கணேசன்

**வாதி தரப்பு சாட்சி 2 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**- 5, 6 பிரதிவாதிகள் தரப்பில்

தாவா வாதி ராஜம்மாள் எனது மனைவி என்றால் சரிதான். எனது மனைவி தாக்கல் செய்த வழக்கிற்கு நான் சாட்சியம் அளிக்கிறேன். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் படித்து பார்த்துதான் கையெழுத்து செய்து நீதிமன்றத்தில் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் எனது மாமனார் பெயர் மாரிமுத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது அது தவறு என்று சொன்னால் சரிதான், எனது மாமனார் பெயர் கந்தசாமி ஆகும். வசந்தி இறந்த பின்னிட்டு 5 ம் பிரதிவாதிக்கும், எனக்கும் பேச்சுவார்த்தை மற்றும் போக்குவரத்து இல்லை என்று சொன்னால் சரிதான். 5 ம் பிரதிவாதி எங்கு இருக்கிறார் என்று தெரியாது என நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது பொய்யானது என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்தபோது வாதியானவர் 5, 6 பிரதிவாதிகளை 2013 ம் ஆண்டு கட்சி சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்ததற்கான காரணம் அவர்களது பாகத்தையும் சேர்த்து துர்லாபம் அடைய வேண்டும் என்பதற்காக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா 2 வது அயிட்ட சொத்தை பொருத்து 5, 6 பிரதிவாதிகளுக்கு உரிய பாகத்தை ஒதுக்குவதற்கு எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் அவர்களுக்கு உரிய பாகத்தை ஒதுக்குவதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. 1 வது அயிட்ட சொத்தை பொருத்து வாதிக்கு பாகம் கேட்க எவ்வித உரிமையும் ஏற்படுவதில்லை என்று சொன்னால் சரியல்ல.

1 வது அயிட்ட சொத்தில் கூரை வீடாக இருந்ததை 2022 ம் ஆண்டில் அது தொகுப்பு வீடாக மாற்றப்பட்டுள்ளதாக எனது முதல் விசாரணையில் குறிப்பிடப்பட்டு சொல்லியுள்ளது சரியா இல்லையா என்றால் சரிதான். வாதியின் தந்தை சொத்துக்களை பொருத்து பாக பிரிவினை ஆவணம் எழுத சொன்னதற்கு 3 ம் பிரதிவாதியின் கணவர் அவரது மனைவி பெயரில் தானசெட்டில்மெண்ட் ஆவணம் பொய்யாக எழுதிகொண்டார் என்று சொன்னால் சரிதான்.

**(குறுக்குவிசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் ஒத்திவைக்கப்படுகிறது)**

ஒப்பம்/-PW2

ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்.